11.10.2022
செவ்வாய் கிழமை

*அணு ஸ்வரூபம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. ஜீவ ஸ்வரூபமானது அணு என்பது ப்ரமாண ஸித்தம்.

# கடோபநிஷத் கூறும் போது,

*அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேணோவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்*

என்று

*அ* என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; *உ* என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு *ம* என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

# *தத்வ சாகர ஸம்ஹிதையில்* விளக்கப் படுகிறது :

*பஞ்சார்ணானாம் து பஞ்சானாம் வர்க்காணாம் பரமேஸ்வர: ஸம்ஸ்தித: காதிமாந்தானாம் தத்வ ஆத்மத்வேன ஸர்வதா*

அதாவது,

*க* காரம் முதல் *ம* காரத்தோடு முடிகிற ஐந்து ஐந்து அக்ஷரங்கள் அடங்கிய ஐந்து வர்க்கங்களால் சொல்லப் படும் 25 தத்வங்களுக்கும் ஆத்மாவானவன் ஸர்வேஸ்வரன். அதாவது, 25 தத்வங்களின் பிரிவானது :

क ख ग घ ङ - பஞ்ச பூதங்கள்
च छ ज झ ञ - ஐந்து கர்மேந்த்ரியங்கள்
ट ठ ड ढ ण - ஐந்து ஞானேந்த்ரியங்கள்
त थ द ध न - ஐந்து தன் மாத்ரைகள்
प - மனஸ்
फ - அஹங்காரம்
ब - மஹான்
भ - மூல ப்ரக்ருதி
म - ஜீவன் (பஞ்சவிம்சகன்)

இந்த *ம* கார வாச்யனனான ஜீவனை ப்ரமாணம் 25வது தத்வம் என்கிறது.

*ஆத்மா ஸ து மகாரோயம் பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித:*

*ம* காரத்தின் தாதுக்காளாலே *மன ஞானே* என்றும் *மன அவபோதனே* என்றும் *மஸ பரிமாணே* என்றும் அர்த்தம் உண்டாகும். அதாவது, ஜீவனானவன் ஞானமாயும், ஞானத்தை உடையவனாயும், அணு ஸ்வரூபனாயும் உள்ளவன் என்பதாகும்.

# ஜீவர்களின் ஸ்வரூப நிரூபக தர்மமாவது, ***ஞானமாயும்*** , ***ஆனந்தமாயும்*** , ***அமலமாயும்*** மற்றும் ***அணுவாயும்*** இருப்பது, என்பது ப்ரமாண ஸித்தம்.

2. ஸகல ஜீவர்களும், பத்த-முக்த-நித்யர்களும் அணு ஸ்வரூபத்தை உடையவர்களே !

# ஸர்வேஸ்வரனான பகவத் கீதையில் (5-18) பண்டிதன் ஆத்மாவை எவ்வாறு காண்கிறான் என்ற விளக்கம் அளிக்கிறான்:

***வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ஶுநி சைவ ஸ்வபாகே ச பண்டிதா: ஸமதர்ஸிந:***

அதாவது,

கல்வியும் விநயமும் நன்கு கற்ற பிராமணனிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைத் தின்னும் புலையனிடத்தும், பண்டிதர் சமப் பார்வையுடையோர் ஏனெனில் அவர்களுள் உள்ள ஜீவாத்மா, இயற்கை நிலையில், ஒரே மாதிரிநாக உள்ளவையே; அதாவது அணு ஸ்வரூபமாய், ஞான ஸ்வரூபமாய், ஆனந்த ஸ்வரூபாமய், அமலமாய் இருப்பதால்; வித்யாஸங்கள் அனைத்தும் கர்ம அனுகுணமாக அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற தேஹங்களாலேயே !

# இவ்விஷயத்தில் தெளிய வேண்டுவது, திருமந்திரத்தின் பொருளாக, அணு ஸ்வரூபனான ஜீவர்கள் அனைவரும், அனைத்து காலங்களிலும், அனைத்து நிலைகளிலும், அனைத்து இருப்பிடங்களிலும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு மட்டுமே சேஷ பூதன், தாஸ பூதன். சம்சாரி ஜீவர்கள் அவன் திருவடிகளைப் பற்றியே

***அஹமாத்மா ந தேஹோஸ்மி விஷ்ணு சேஷோ அபரிக்ரஹ தமேவ சரணம் ப்ராப்தா தத் கைங்கர்ய சிகீர்ஷயா***

என்கிறபடி, பிறவிப் பிணியிலிருந்து விடுபட இயலும், என்பது ப்ரமாண ஸித்தம்.

ஆக, திருமந்திரத்தைக் கொண்டு,

***நான்*** என்கிற சொல் ஆத்மாவை குறிக்கும்; எனது சரீரத்தை குறிக்காது; ஸர்வேஸ்வரனுக்கு நான் அடிமைப் பட்டவன்; எனக்கு அடிமைப்பட்டது என்பது எதுவும் கிடையாது ; ஜீவர்களுக்கு, அடிமைப் பட்டதாக இங்கு தோன்றும் அனைத்தும் சரீர சம்பந்தத்தினால் ; ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை சரண் அடைவது அவனுக்கு அடிமைத் தொழில் செய்வதற்காக,

என்கிறபடியே ஸ்வரூப, உபாய, புருஷார்த்த நிஷ்டைகளை நாம் அறியலாம்.

இதனால் தெளிய வேண்டுவதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே அனைத்து ஜீவர்களுக்கும் நிரூபாதிக சேஷி ; ஸகல ஜீவர்களும் ஸல்வேஸ்வரனுக்கு நிரூபாதிக சேஷ பூதர்கள்.

3. சில இடங்களில், உபநிஷத், ஈஸ்வரனை ஸூக்ஷ்மமானவன் (அதாவது சிறியவன்) என கூறுகிறது.

அதன் தாத்பத்யத்தை உணர வேண்டும். அது பெருமாள்-பிராட்டியின் விபுத்வத்தை விலக்காது:

# கடோபநிஷத் – ***அனோரணீயாந்*** – அணுவை விட அணுவாக உள்ளான் – என்று பரம்பொருளைப் பற்றிக் கூறத் தொடங்குகிறது.

# இதனைத் தொடர்ந்து கடோபநிஷத் – ***மஹாந்தம் விபுமாத்மாநம் மத்வா தீரோ ந சோசதி***– எங்கும் உள்ளவனும் பெரியவனும் ஆகிய பரம்பொருளை உபாஸிப்பவன் துன்பம் அடைவதே இல்லை – என்று பரம்பொருள் மீது உள்ள உபாஸனம் கூறப்பட்டது.

சாஸ்த்திரம் அனைத்தும் அவனை விபு ஸ்வருபன் என்று உரைக்கிறதே !

அதாவது,

*__ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம; ஆனந்தம் ப்ருஹ்ம; அமலம் ப்ருஹ்ம__*

என்கிறது தைத்ரீய உபநிஷத் வரி.

பரம்பொருளானவன் விகாரமற்றவன்; பூரண ஞானமுடையவன், *__விபு ஸ்வரூபன்__* , ஆனந்த ஸ்வரூபன் , குறைகள் அற்றவன். அவனே ஸ்ரீமந் நாராயணன்,

என தெளிவு படக் கூறுகிறது.

# இதை, திருமழிசை ஆழ்வாரின் *__நான்முகன் திருவந்தாதி__* கொண்டு தெளியலாம்.

*__சேயன் அணியன் சிறியன் மிகப்பெரியன்__*

அதாவது

*__சேயன்__* - உயர்ந்தவன்

***அணியன்*** - எளியன்

***சிறியன்*** **-** அணு போன்றவன்

***மிகப்பெரியன்*** **-** விபு ஸ்வரூபத்தை உடையவன்

இரண்டு விருத்த சப்தமாகத் தோன்றினாலும், அவைகள் தரும் அர்த்தங்கள் வெவ்வேறானவை.

# இதனால் அறிய வேண்டுவது என்னவென்றால்

எம்பெருமானிடம் உள்ள விபுத்வமானது

மிகச் சிறிய வஸ்துக்களிலும் உட் புகுந்து, சேர்ந்து, தான் இல்லாத்தொரு இடம் கிடையாது எனக் கூறும் வகையில் வ்யாபிக்கும் தன்மை என்பதே ஆகும்.

4. தைத்தீரிய உபநிஷத்- நாராயண அநுவாகத்தில்,

*__அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:__*

அதாவது,

எல்லா த்ரவ்யங்களுக்கும் அந்தர்யாமியாக உள்ளும் வெளியேயும் வியாபித்து இருப்பவன் நாராயணன் என்னும் பரம் பொருள்.

நாராயண சப்தத்தில் *__பஹுவ்ருஹி சமாஸம்__*

*__நாரா: அயனம் யஸ்ய ஸ:__*

அதாவது ‘நாரங்களை அயனமாக (இருப்பிடமாக) உடையவன்’.

சேதன அசேதன வஸ்துக்கள் உள்ள இடத்தில், தான் இல்லை என எண்ணவொண்ணாதபடி அவன் கலந்து நிற்கிறான் -- இந்த வகைப் புணர்ச்சியினால் ஏற்படும் பொருளாவது, ‘உள் பரவல்' ( ***அந்தர்-வ்யாப்தி*** ) என்று பொருளாகிறது.

***தத் புருஷ சமாஸம்*** கொண்டு, நாராயண பதத்தை,

***நாராாணாம் அயனம்***

என்று பார்த்தால், நாராயணன் அனைத்துக்கும் தான் இருப்பிடமாக இருந்து கொண்டு வ்யாபித்துள்ளதாக, ***பஹிர் வ்யாப்தி*** உள்ளவனாகிறான் என புலப்படும்.

# ***அந்தர் வ்யாப்தியாவது***, அனைத்து சேதன அசேதன வஸ்துக்கள் உள்ள இடங்களில், ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன் இல்லை, என்று கூற இயலாதபடி அனைத்திலும் கலந்து இருக்கை.

# ***பஹிர் வ்யாப்தியாவது***, சேதன அசேதன வஸ்துக்கள் இல்லாத இடங்கள் அனைத்திலும், ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன் உள்ளான், என்னும்படியாக இருக்கை.

5. பராசர மஹரிஷி,

***நாராயணமணீயாம்ஸம் அசேஷாணாமணியஸாம். ஸமஸ்தானாம் கரிஷ்டம் ச பூராதீனாம் கரீயஸாம்***

என அருளினார்.

அதாவது, ‘ஸுக்ஷ்மமான அனைத்து வஸ்துக்களைக் காட்டிலும் ஸுக்ஷ்மமான நாராயணன்’ எனப் பொருள் படுகிறது.

இதனால் அறியப் படுவது என்னவென்றால், எங்கும் வ்யாபித்துள்ளவனுக்கு, ‘அனைத்து வஸ்துக்களிலும் நிறைந்துள்ள தன்மை’ என்பது அந்த வஸ்துவுடன் நீக்கம் இல்லாமல் கலந்திருப்பதனாலேயே (அந்தர் வ்யாப்தியாவது மற்றும் பஹிர் வ்யாப்தியாவது கொண்டு) , அந்த வஸ்துவை நிர்வஹிக்கும் சக்தி கொண்டதாகும்.

6. சாஸ்த்திரத்தினால் சொல்லப்படுகிற, நீக்கமற எங்கும் உள்ள எம்பெருமான், அணுவான ஜீவர்களின் உள்ளும் நிறைந்திருக்கிறானா இல்லையா, என சிலர் சந்தேஹிப்பர்.

# உள் ப்ரதேசம் இல்லாமையை அணு என்று கூறும் போது, அணுவான ஜீவனின் உள் ப்ரதேசத்தில் ஸர்வேஸ்வரன் இருக்கிறான் என்பது பொருந்தாது.

ஒரு வஸ்துவில் இரு முரண் பட்ட தர்மங்கள், ஒரே காலத்தில், சேர்ந்து இருக்க இயலாது என்பது ***ந்யாய சாஸ்த்திர விதி*** ; தண்ணீர் சூடாகவும் குளுமை உடையதாகவும் ஒரே காலத்தில் இருக்க இயலாது அன்றோ ! இதில் உபாதி ப்ரயுக்தமான மாறுதல்கள் உண்டாகிறது.

ஆக, உள் ப்ரதேசம் இல்லாத அணு ஸ்வரூபனான ஜீவனின் உள் ப்ரதேசத்தில், எம்பெருமான் உள்ளே வ்யாபிக்கிறான் என்பது பொருந்தாது.

மேலும், ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு விரோதமாக சாஸ்த்திர ப்ரமாணம் ஒரு போதும் கூறாது என்பதே ஶ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம்.

# ஆக, ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனுக்கு, ஸர்வ அந்தர்யாமித்வம் உள்ளது என்பதன் தாத்பர்யமாவது,

உள் ப்ரதேசம் அற்ற அணுவான ஜீவனுக்கு உட்புகுதல் கிடையாது; அதற்கு வெளியில் சூழ்ந்திருத்தல் மட்டுமே உள்ளது. இதனால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் அதனுடன் கலந்திருந்து அந்தர்யாமி ஆகிறான்.

விபுவான வஸ்துக்களுக்கு, உதாரணமாக காலதத்வத்திற்கு, அதற்கு வெளியில் சூழ்ந்திருத்தல் கிடையாது; இருந்த போதிலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் அதனுடன் கலந்திருந்து அந்தர்யாமி ஆகிறான்.

# அணுவாகவோ அல்லது விபுவாகவோ அல்லாத வஸ்துவிற்கு, உதாரணமாக ப்ரக்ருதிக்கு, உட்புகுதல் மற்றும் அதற்கு வெளியில் சூழ்ந்திருத்தல் இரண்டுமே உண்டு. இதனால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் அதனுடன் கலந்திருந்து அந்தர்யாமி ஆகிறான்.

# இதையே, ஸ்வாமி தேசிகன் ***மூல மந்த்ராதிகாரத்தில்*** விளக்குகிறார் :

***அந்தர் வ்யாப்தியாவது இவை உள்ள இடத்தில் தான் இல்லை என்ன ஒண்ணாதபடி கலந்து நிற்கை ; பஹிர் வ்யாப்தியாவது இவை இல்லாத இடத்திலும் எங்கும் தான் உளனாகை***

7. ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், ஸ்வரூபத்தால் ஸகல சேதன அசேதன வஸ்துக்களிலும் உள்ளும் புரமும் நிறைந்திருக்கிறான் ; இதனால், ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில்,

***திடம் விசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை, படர் பொருள் முழுவதுமாய் அவை அவை தொறும், உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்து உளன், சுடர் மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே***

அதாவது, உறுதியான ஆகாசம் அக்நி வாயு ஜலம் பூமி அந்தந்த பதார்த்தங்கள் எல்லாவற்றிலும், சரீரத்தில் ஆத்மா வ்யாபிப்பதுபோல, மறைந்து உள்ளிலும் வெளியிலும் வ்யாபித்து வேதத்தால் உணரப்படுபவனான எம்பெருமான், ப்ரளய காலத்தில், இவற்றையெல்லாம் தன் பக்கலிலேயாக்கிக் கொள்ளும் தேவனாவான்.

இதனால் தெளிய வேண்டுவது :

# அணு ஸ்வரூபத்தை உடைய ஜீவனுக்கு உள் ப்ரதேசம் கிடையாது ; இந்த ஜீவ ஸ்வரூபத்தில் வெளி ப்ரதேச வ்யாப்தியால், நீக்கமற கலந்திருந்து ஸர்வேஸ்வரன் அந்தர்யாமி ஆகிறான்.

# விபு ஸ்வரூபனான ஸர்வேஸ்வரன், தான் இல்லை என்று சொல்ல ஒண்ணாதபடி ஸகல வஸ்துக்களிலும் நீக்கமற கலந்திருந்து விபுவாகிறான் ; உள் ப்ரதேசம் உடைய ஸ்க்ஷுமமான வஸ்துக்கிளல், அதி ஸூக்ஷ்மமான நிலை கொண்டு உட் புகுகிறான் என்பதனை ஸ்ருதி ***அனோரணீயாந்*** – அணுவை விட அணுவாக உள்ளான் – என்று பரம்பொருளைப் பற்றிக் கூறத் தொடங்குகிறது.

சம்சாரி ஜீவனாவன், உட் ப்ரதேசம் கொண்ட ஸூக்ஷ்ம சரீரத்தில் உட் புகுந்து, ஸ்தூல சரீரத்தை விட்டு வெளிக் கிளம்புவது போல, விபு ஸ்வரூபனான ஸர்வேஸ்வரன், உள் ப்ரதேசம் உடைய ஸ்க்ஷுமமான வஸ்துக்கிளல், அதி ஸூக்ஷ்மமான நிலை கொண்டு உட் புகுகிறான்.

8. புலன்களுக்கு அப்பாற் பட்ட அதீந்த்ரிய விஷயங்களை சாஸ்த்திரம் கொண்டே தெளிய வேண்டும். இந்த பகவத் விபுத்வத்தை, ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில் தெளிவு படுத்தியுள்ளார். உலக வழக்கில், நீதி மன்றங்களிலோ, பட்டி மன்றங்களிலோ விவாதங்கள் உண்டாகும் போது, அந்த பேச்சாளர்கள், ஒரு முடிவை ஆமோதித்து, அதற்கான ஆதாரங்களை தேடுவார்கள்.

# ஸ்வாமி தேசிகன், சாஸ்த்திர விஷயங்களில் இவ்வாறு தர்க்கம் செய்யலாகாது என்கிறார்.

***தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது***

என்கிறார் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில் ஸ்வாமி தேசிகன். அதாவது, *நம் புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களில், வாதத் திறமையை மட்டுமே கை கொண்டு சாஸத்திரத்திற்கு விரோதமான கருத்துக்களை கூறாமல்* , சாஸ்த்திரத்தை ஆதாரமாய் கொண்டு விளக்குவதே ஆஸ்திகர்களின் தர்மமாகிறது, என்கிறார்.

ஆக, அணு ஸ்வரூப விபு ஸ்வரூபங்களை சாஸ்த்திரம் கொண்டே அறிய வேண்டும்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

12.10.2022
புதன் கிழமை

***க்ரியை மற்றும் ஐஸ்வர்யம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. சாஸ்த்திரத்தில் விதி நிஷேத ***க்ரியைகள்*** தெளிவாக்கப் பட்டு இருந்தும், சம்சாரி ஜீவன் விபரீத செயல்களால் பாப பூண்யங்களை சம்பாதிக்கிறான் ; பலனையும் அனுபவிக்கிறான்.

# கர்ம மீமாம்ஸை வரி :

***சாஸ்த்திர பலம் ப்ரயோக்தரி***

அதாவது, சாஸ்த்திரம் விதித்த ***க்ரியைகளை*** அனுஷ்டிப்பவனுக்கே அதற்காக சொல்லப் படுகிற பாப புண்ய பலன்கள் ஸித்திக்கும். அதாவது, சாஸத்திர விதிகளை மீறும் போது பாபங்களும், சாஸ்த்திர விதிகளை பின்பற்றும் போது புண்யங்களும் ஸித்திக்கும் ;

# ***ந புக்தம் க்ஷீயதே கர்ம கல்ப கோடி ஸதைரபி***

என்கிற சாஸ்த்திர விதிப்படி, கல்ப கோடி காலங்களானாலும், பாப புண்ய கர்மாக்கள் அனுபவியாமல் அழியாது.

# கர்மா எனப்படும் புண்யம் மற்றும் பாபம் என்ற சொற்களின் ஸாமான்ய விளக்கம்:

***புண்யமாவது*** இந்த சம்சாரி ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிப்படி உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஏற்படும் சந்தோஷம்; அதன் விளைவாக ஏற்படும் அனுகூலங்கள்.

***பாபமாவது*** இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிக்கு மாறாக உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஏற்படும் சீற்றம்; அதன் விளைவாக ஏற்படும் ப்ரதிகூலங்கள்.

2. ஜீவர்கள் செயல் புரியும் தன்மை கொண்டவர்கள் ; இது ப்ரத்யக்ஷ ப்ரமாண ஸித்திம் ; அது பகவத் அதீனம் என்பது, சாஸ்த்திர ப்ரமாண ஸித்தம் :

# உபநிஷத் சாரமான, வேத வ்யாஸரால் அருளப் பெற்ற,

***கர்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்; பராத் து தச்ருதே***

என்ற ப்ருஹ்ம ஸூத்ரங்களுக்கு ஶ்ரீராமானுஜர், ஜீவர்கள் செயல் புரியும் தன்மை உடையவர்கள் என்றும், ஆனால் ஜீவர்கனின் செயல் புரியும் தன்மை ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனின் ஆதிக்கத்தில் உள்ளது என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், ஸகல உபநிஷத் சாரமான பகவத் கீதையில் (2-47),

*கர்மண்யேவ அதிகார அஸ்தே மா பலேஷூ கதாசந மா கர்மபலஹேதுர்பூ: மா தே ஸங்கோSஸ்த்வ அகர்மணி*

என அருளினான்.

அதாவது,

செயல் புரியத்தான் உனக்கு அதிகாரமுண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக்கு அதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே; செல் செய்யாமலுமிராதே.

3. ஆக, பரதந்த்ர ஜீவர்களின் செயலானது, எத்தகையது என அறிய வேண்டும்.

# செய்ய வேண்டிய செயல்கள் அனைத்தும் ஐவரால் செய்யப் படுகின்றன என்று விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதை (18-14) ஸ்லோகத்தில்.

*அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருதக் விதம். விவிதாஸ்ச ப்ருதக் சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்*

அதாவது,

‘ஸகல செயல்களுக்கும் காரணங்கள் ஐந்து :

***ஆத்மா*** - கர்மாக்களை சம்பதிக்கவும், கர்மானுகுண பலனை அனுபவிக்கவும் செய்கிறான்.

***உடல்*** - ஜனன காலத்தில், கர்மானுகுணமாக ஸர்வேஸ்வரனால் கொடுக்கப் படுவது.

***இந்த்ரியங்கள்*** (மனம் உள்பட) - ஜனன காலத்தில், கர்மானுகுணமாக ஸர்வேஸ்வரனால் கொடுக்கப் படுவது.

***ப்ராணன்*** - சரீர ஆத்மாவின் சேர்க்கைக்கு காரணம் - ஜனன காலத்தில், கர்மானுகுணமாக ஸர்வேஸ்வரனால் கொடுக்கப் படுவது.

***பரமாத்மா*** - ஸர்வ நியந்தா ; கர்மானுகுண பல ப்ரதன்

- என்கிறான் கண்ணன்.

இந்த விஷயத்தில், ஸர்வேஸ்வதனான கண்ணனின் செயல்களின் வகைகளாவது,

***காரயிதா*** - சரீரம், புலன்கள் போன்றவைகளை, அவரவர்களின் பாப புண்ய கர்மாக்களின் அடிப்படையில், இயங்கச் ***செய்விப்பவன்***. தேவ - மனுஷ்ய - த்ரியக் - தாவர சரீரத்தை அளித்து செய்விப்பவன்.

***கர்தா*** - ஜீவாத்மாக்களுக்கு சரீர சம்பந்தத்தைக் கொடுத்து, அவர்களது செயல்களுக்கேற்ற பலனை, கர்ம அனுகுணமாக, அளித்து, செயல்களைச் ***செய்பவன்***.

*உபேக்ஷகன்* - ஜீவாத்மாக்களின் முயற்சிகளை (நல்லது அல்லது கெட்டது என்று) *விலக்காதவன்*.

*அனுமந்தா* - ஜீவாத்மாக்களின் செயல்களை ஸ்வதந்தரமாக தொடங்க *அனுமதிப்பவன்*.

*ஸஹகாரி* - செயல்களில் ஜீவாத்மாக்கள் ஈடுபடும் போது, தான் பெரும் பகுதியை ஏற்று அந்த செயல்களுக்கு முன்னேற்றம் கொடுத்து *உதவி புரிபவன்*.

ஆக, பரதந்த்ரனான ஜீவனுக்கு, ப்ரதம ப்ரவ்ருத்தியில் மட்டுமே ஸ்வாதந்த்ரியம் உண்டு என்பது ப்ரமாண ஸித்தம். அதானல் தான் பாப புண்ய பலனுக்கு ஜீவன் அர்ஹனாகிறான்.

# கர்ம அனுகுண பல ப்ரதனான எம்பெருமான் தன் ஸங்கல்பத்தினால், ஜகத் வ்யாபாரத்தை செய்தானாகிலும், விதி நிஷேத சாஸ்த்திரங்கள் பயன்ற்று போகுமே என்னில்,

***க்ருத ப்ரயத்ந அபேக்ஷ: து விஹித ப்ரதிக்ஷித்தா வையர்ய்யாதிப்ய:***

என்கிற *ப்ருஹ்ம ஸூத்ரமாவது* (பராயத்தாதிகரணம்), விதி நிஷேத சாஸ்த்திரங்கள் வீணாகக் கூடாது என்பதால், ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு ஸ்வாதந்த்ரியம் உண்டு என்பதாகிறது.

4. *க்ரியைகள் பல விதம்* ; சாஸ்த்திர விதியான க்ரயைகளை அனுஷ்டிக்கும் போது, அதற்கு பலனாக ஐஹிக, ஆமுஷ்மிக, கைவல்ய பலன்கள் ஸித்திக்கிறது.

# கண்ணன் பகவத் கீதையில் (7-16) இதனை தெளிவிக்கிறான்.

***சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுஹ்ருதினோர்ஜுந. ஆர்த்தோ ஜிக்ஞாஸு அர்தார்த்தி க்ஞானீ ச பரதர்ஷப:***

அதாவது,

என்னை (கண்ணனை) பூஜிப்பவர்கள் நால்வர், என ஸர்வேஸ்வரன் தெளிவு படுத்தினான்.

முதல் வகை : *ஆர்த்தன்* - இழந்த செல்வத்திற்காக ( *ஐஸ்வர்யம்* ) பரிதவிப்பவர்கள்.

இரண்டாம் வகை : *அர்த்தார்த்தி* - தன்னிடம் இல்லாத புதிய செல்வத்தை ( *ஐஸ்வர்யம்* ) வேண்டுபவர்கள்.

மூன்றாம் வகை : *ஜிக்ஞாஸு* - தன்னுடைய பரிசுத்தமான ஆத்ம ஸுகானுபவ ( *கைவல்யம்* ) ஆனந்தத்தை விரும்புகிறவர்கள்.

நான்காம் வகை : *ஞானி* - எப்போதும் தான் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு மட்டுமே தாஸ பூதன் என்ற தன்னுடைய ஸ்வாபாவிகமான நிலையையும் உணர்ந்து, அவனையே பலனாக ( *மோக்ஷம்* ) அடைய விரும்புபவர்கள்.

# பகவத் உத்கர்ஷத்தை உணராது, வேத விதிப்படி ஓர் *க்ரியையில்* , ஈடுபடும் போதும் பலன் ஸித்திக்கிறது ; சிலர், *தேவதா உபாஸனம்* இந்திரன், சூர்யன் போன்ற தாழ்ந்த ப்ராக்ருத தேவதைகளை த்யானித்து அதி அல்ப ப்ராக்ருத பலனைப் பெறுகிறார்கள்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (4-12) அருளுவதாவது:

***காங்க்ஷந்த கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர் பவதி கர்மஜா***

அதாவது,

‘கர்மாக்களின் ப்ராக்ருத பலனை உடனே கால தாமதமின்றி விரும்புகிறவர்கள் ப்ரக்ருதியில் உள்ள தேவதைகளை உபாஸிக்கிறார்கள். அதன் மூலமாக விரைவிலேயை பலன் உண்டாகிறது.’

# சிலர் ***நாமோபாஸனத்தில்*** ஈடுபடுவர்; வாக்கு மனம் ஆகாயம் போன்ற அசேதனங்களில் ப்ருஹ்மமாக ஏறிட்டு உபாஸனம் ; இதன் பலனாக எங்கும் ஸஞ்சரித்தல் போன்ற பலன்களைப் பெறலாம்.

# இதை விட உயர்ந்த பலனாக ஜீவாத்ம அனுபவத்தை பெற எண்ணி, சிலர் ***ப்ரதீக் உபாஸனத்தில்*** ஈடுபடுகிறார்கள்.

கைவல்யமாகிற, ஜீவாத்ம அனுபவத்தை பெற எண்ணி, செய்யப்படும் ***ப்ரதீக் உபாஸனமாவது*** , குறிப்பிட்டபடி ஆசனத்தில் அமர்ந்து மனதை கட்டு படுத்தி ஸதாசார்யன் உபதேசத்திற்கு ஏற்ப, சாஸ்த்ரங்களில் உள்ள விதிப் படி பின்வருமாறு நான்கில் ஒரு ப்ரகாரத்தை தேர்வு செய்து த்யானிப்பது; இது, ***ஸ்ரீபாஷ்ய கார்யாதிகரணத்தில்*** , பூம வித்யா ப்ரகரணத்தில், விளக்கப் பட்டிருக்கிறது.

***ப்ரக்ருதியுடன் கூடிய தன் ஆத்மாவை ப்ருஹ்மமாக*** ஏறிட்டு த்யானம் செய்வது

***ப்ரக்ருதியுடன் கூடிய தன் ஆத்மாவை ‘நான்*** என த்யானம் செய்வது

***ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்ற தன் ஆத்மாவை ப்ருஹ்மமாக*** ஏறிட்டு த்யானம் செய்வது

***ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்ற தன் ஆத்மாவை ‘நான்*** என த்யானம் செய்வது

# ஸர்வேஸ்வரனான கண்ணன், விளக்கி அருள்கிறான் :

***யே அந்ய தேவதா: பக்தா யஜந்தே ஸ்ரத்தயா அந்விதா: தேSபி மாம் ஏவ கௌந்தேய யஜந்தி அவிதி பூர்வகம்*** (பகவத் கீதை : 9-23)

அதாவது, குந்தியின் மகனே ! எவர்கள் மற்ற தேவதைகளிடத்தில் பக்தியுடன், சாஸ்த்திர நம்பிக்கையுடன் கூடியவர்களாக இருந்து வழிபடுகிறார்களோ, அவர்களும் அக்ஞானத்துடன், வேத விதிகளைப் புறக்கணித்து, என்னையே ஆராதிக்கின்றார்கள்.

வேதவ்யாஸர் மஹாபாரதத்தில், ***ப்ருஹ்மாணம் சிதி கண்டம் ச யாச்சன்யா தேவதா ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா: ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்*** என அருளியதாக காட்டப் பட்டிருக்கிறது ; அதாவது, ப்ராக்ருத லோகத்தில் இருக்கும் ப்ருஹ்மா, சிவன் போன்ற அவர தத்வமான தேவதைகளை, புத்தி உள்ளவர்கள் (மோக்ஷத்தில் ஆசை உள்ளவர்கள்), ஸேவிப்பதில்லை. அவர்கள் கொடுக்கும் பலன்கள் அல்பமாயும் அழிவடையும் தன்மையும் கொண்டுள்ளன என்கிற காரணத்தால் ; ஆக, ஸர்வ அந்தர்யாமியான கண்ணனே ஆராத்யன்.

இங்கு ***யஜந்தி அவிதி பூர்வகம்*** என்பது சாஸ்த்ரீய செயல்களை விதி மீறி செய்வதாகிற ***விகர்மாவை*** உணர்த்துகிறது.

5. ஸ்வாமி தேசிகன், ***க்ரியைகளால்*** ஸித்திக்கும் அனைத்து பலன்களின் தன்மைகளை, ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில், தெளிவு படுத்தியுள்ளார் :

***அசாரம் அல்ப சாரம் ச சாரம் சாரதரம் த்யஜேத். பஜேத் சாரதமம் சாஸ்த்ரே ரத்னாகர இவாம்ருதம்***

***அசாரம்* -** சாஸ்த்ரத்திற்கு முரணான விஷயங்கள்; முற்றிலுமாக தவிர்க்கப் பட வேண்டியது.

***அல்ப சாரம்*** - ஐஹிக பலன் (இந்த லோகத்துப் பலன்கள்); அல்பமானதால் தேவையற்றது

***சாரம்*** - ஆமுஷ்மிக பலன் (ஸ்வர்காதி பலன்கள்); மோக்ஷ பலனுக்கு தடையானது

***சார தரம்*** - கைவல்யம் (ஆத்மானுபவம்); இயற்கையான ஜீவர்களின் உயர்ந்த பலனுக்கு விரோதமானது

***சார தமம்*** - வைகுண்டப் ப்ராப்தி (மோக்ஷம்); உயர்ந்த பலன்

6. சம்சார பந்தத்தை விளக்கும் போது, ஸ்வாமி தேசிகன் ***உபோத்காதாதிகாரத்தில்***

***கர்ம அவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹே தத் தத் காலே விபக்தி: பவதி ஹி விவிதா ஸர்வ ஸித்தாந்த ஸித்தா***

என அருளினார். அதாவது, அந்தந்த உரிய காலங்களில், அநாதியாக கர்ம-அவித்யா-வாசனை-ருசி-ப்ரக்ருதி சம்பந்தம்  என்கிற சக்ரத்தில், ஒரு வட்ட வடிவத்தில், சுழன்று இருக்கும் சம்சாரி ஜீவன்களுக்கு, அவரவர்கள் கர்ம வினைக்கு ஏற்ப பலன்கள் பலவாறாக வருகின்றன. இந்த சம்சாரி ஜீவர்களின். கர்ம அனுகுணமான பிறப்புக்களுக்கு, தொடர்பு உண்டு என்பது ப்ரமாண ஸித்தம்.

இந்த சம்சாரி ஜீவர்கள், கர்ம அனுகுணமான 'ப்ரக்ருதியால் ஆன சரீர' சம்பந்த காரணமாக செயற்கை தன்மையை அடைகிறார்கள். இந்த செயற்கை தன்மைக்கு காரணம் ஐந்து. அவையாவன:

# ***அவித்யை*** - சரீரத்தையே ஆத்மாவாகவும், ஆத்மாவை சுதந்திரனாகவும் நினைத்தல் போன்ற உண்மைக்கு மாறான எண்ணங்கள்.

# ***கர்மம்*** - அவித்யையால் ஜீவன் செய்யும் சாஸ்த்திரத்தை மீறிய செயல்கள்.

# ***வாசனை*** - அவித்யா மற்றும் கர்மம் காரணமாக ஜீவனுக்கு உண்டாகும் ஸம்ஸ்காரம் (தன்மை).

# ***ருசி*** - வாசனைக்கு ஏற்ப உண்டாகும் செயலில் விருப்பம்.

# ***ப்ரக்ருதி சம்பந்தம்*** - மேலுள்ள நான்கு காரணங்களினால் உண்டாகும் ப்ராக்குத சரீர சம்பந்தம்.

இங்கு ***கர்ம அவித்யாதி சக்ரே*** என்பது பாபங்களைச் சேர்ப்பதாகிற, ***கர்மாவை*** உணர்த்துகிறது.

7. ஸர்வேஸ்வரனான கண்ணன் ப்ராக்ருத பலன்ககளில் உள்ள தோஷங்களை உபதேசத்தை செய்கிறான் (பகவத் கீதை 9-33):

***கிம் புநர் ப்ராஹ்மணா புண்யா: பக்தா ராஜர்யஸ் ததா. அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்***

அதாவது,

'தாழ்ந்த உலக அநுபவத்தை விட்டு உயர்ந்த பலனை அடைய என்னை பஜி.'

என்று பக்தி யோகத்தை விதிக்கிறான் கண்ணன்.

# அனைத்து ப்ராக்ருத பலன்களிலும் ஏழு விதமான குற்றங்கள் இருப்பதாக சாஸ்த்ரங்களால் கூறப்படுகின்றன. அதாவது,

***அல்பத்வம்*** - ஸுகத்தின் அளவில் குறைவு

*அஸ்திரத்வம்* - நிரந்தரம் அற்ற தன்மை கொண்ட ஸுகம்

*துக்க மூலத்வம்* - அந்த ஸுகத்தை அடையும் முயற்சியில் உள்ள துக்கம்

*துக்க மிஸ்ரத்வம்* - அனுபவிக்கும் போது துக்கம் கலந்த ஸுக ரூபமான பலன்

*துக்கோதர்கத்வம்* - ஸுகானுபவம் முடியுமே என்ற துக்கம்

*விபரீத அபிமான மூலத்வம்* - தன்னைப் பற்றிய உண்மையற்ற எண்ணங்கள்

*ஸ்வாபிக ஆனந்த விருத்வத்வம்* - துக்கம் கலசாத இயல்பான சந்தோஷத்திற்கு மாறானது

# இதையே ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில்,

***முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில் வண்ணனே அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன் வெந்நாள் நோய் வீய வினைகளை வேர் அறப் பாய்ந்து எந்நாள் யான் உன்னை இனி வந்து கூடுவேன்***

என அருளினார் ; அதாவது,

நான் எப்போதோ செய்த வினைகளுக்காக, நீ எனக்கு இந்த உடலைக் கொடுத்து விட்டாய். அது என்னை எந்தப் பக்கம் இழுத்துச் செல்கிறதோ அந்தப் பக்கம் நான் சென்று சிரமப்படுகிறேன். பிறவி என்கிற இந்தத் துன்பம் எப்போது தீரும்? என்னுடைய வினைகள் வேரோடு அழிவதுஎன்றைக்கு? யான் உன் பாதத்தில் சேரும் நாள் எப்போது வரும்? என வருந்துகிறார்.

8. ஆக, *க்ரியை செய்யும் தகுதி உண்டே ஆகிலும், இந்த பிறவிப் பயனை உணராது, ப்ராக்ருத ஐஸ்வர்ய பலனில் இச்சை கொண்டு க்ரியையில் ஈடுபடுவது, சாஸ்த்திர விஹிதமானதே ஆனாலும் கூட, அது சம்சார பந்த ஹேதுவாகிறது* ;

இந்த, சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில் மோக்ஷ பலத்திற்கு தடைகளான, *ப்ராப்தி விரோதியான* பாபங்கள் 12 வகைகளில் செயல் படுகிறது:

# சாஸ்த்திர விரோதமாக செயல்படும் *அசுர குணம்* உடையவனாக்குகிறது;

# சரீரமே ஆத்மா என்கிற எண்ணத்தோடு *சரீர சுகத்தைக்* கருதியே வாழ்ந்து போவதாகிறது;

# சாஸ்த்திர வச்யதை உள்ள மனித சரீரம் பெறாமல் விலங்குகள் மற்றும் பறவைகள் போன்ற *த்ரியக் சரீரத்தில் புகுந்து* சம்சார ஸுக துக்கங்களை அனுபவித்து போவதாகிறது;

# வேத வேதாந்த சாஸ்த்திர நம்பிக்கை இல்லாத ஒரு கூட்டத்திலே சேர்த்தும் ( *பாஹ்ய மதங்கள்*), வேத வேதாந்த சாஸ்த்திரங்களை தவறாக அர்த்தம் கற்பிக்கும் ஒரு கூட்டத்திலே சேர்த்தும் ( *குத்ருஷ்டி மதங்கள்*) , இருந்து போவதாகிறது;

# வேத வேதாந்த சாஸ்த்திர நம்பிக்கை இருந்த போதும், *உலக விஷயங்களில் மிகுந்த ஈடுபாடு* கொண்டு இருப்பதாகிறது;

# வேத வேதாந்த சாஸ்த்திர நம்பிக்கை இருந்த போதும், *சாஸ்த்திரத்தில் செய்யக் கூடாது என மறுக்கப் பட்ட விஷயங்களை மிகுந்த உவகையோடு செய்து கொண்டு* இருப்பதாகிறது;

# சாஸ்த்திரத்தில் செய்யக் கூடாது என மறுக்கப் பட்ட விஷயங்களை மிருந்த உவகையோடு செய்து கொண்டு இருப்பது, அதனால் உண்டாகும் பாப சம்பந்தத்தினால், *மீண்டும் மீண்டும் பாப காரியமே* செய்திருப்பதாகிறது;

# சாஸ்த்திரத்தில் அனுமதிக்கப் பட்ட, ஆனால் அதற்கு பலனாக அற்பமானவற்றையே அளித்திருப்தை உணராது, அதை கொடுக்க வல்லமை கொண்ட *தாழ்ந்த தேவதா ஈடுபாடு* கொண்டு இருந்து போவதாகிறது;

# அற்பமான *ஸ்வர்காதி பலன்களையே* பெரிதாக நினைத்து, அதை அடைவதிலேயே காலத்தை செலவிடுவதாகிறது;

# யோகங்களைச் செய்ய ஞான சக்தி உடையவர்களையும் ப்ராக்ருத பலனில் மனத்தை செலுத்தவிட்டு அழியக்கூடிய அல்ப ஆனந்தத்தில் திளைக்க செய்வதாகிறது; ( *ஸௌபரி, ஜட பரதர் வ்ருத்தாந்தம்*)

# யோகங்களைச் செய்ய ஞான சக்தி உடையவர்களும், உயர்ந்த பகவத் ப்ராப்தியை விடுத்து தன் *ஆத்ம அனுபவத்தில்* ஈடுபடுவதாகிறது;

# யோகங்களைச் செய்ய ஞான சக்தி உடையவர்களும், முமுக்ஷுவானவனும், அவாந்தரமாக தன் ஆத்ம அனுபவத்தில் ஈடுபடுவது போன்ற ப்ருஹ்ம வித்யையை தேர்ந்தெடுத்து உபாஸிப்பதாகிறது ( *பஞ்சாக்நி வித்யை* போன்றது).

***இதையெல்லாம் விடக் கொடியது, ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த வழி வந்து, ஸாத்யோபாயத்தை ஏற்க மறுப்பது***.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

13.10.2022
வியாழக் கிழமை

***அனைத்து சதுர்முக ப்ருஹ்மாவும் உபாஸகர்களா? - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. ஐந்தாவது வேதமாக போற்றப் படும் மாஹாபாரத இதிஹாஸத்தில், மஹரிஷி வேதவ்யாஸர்,

***யுக கோடி ஸஹஸ்ராணி விஷ்ணும் ஆராத்ய பத்மபூ: புன: த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவான் இதி ஶுஸ்ரும***

என அருளினார்.

அதாவது, ஆயிரம் கோடி யுகங்கள் எம்பெருமானைக் குறித்து தவம் இருந்ததனால், ப்ராக்ருத மூ உலகையும் ( மேல் உலகங்கள் ஸத்ய லோகம் வரை, பூ உலகம், கீழ் உலகங்கள்) ஆளும் ப்ரஜாபதிநாக ஆக்கப் பட்டேன்.

ஆக, ஸர்வேஸ்வரனின் சமஷ்டி ஸ்ருஷ்டியில் உண்டாக்கப் பெற்றவன் சம்சாரி ஜீவனான சதுர்முகன்.

2. சதுர்முகன், *ப்ருஹ்ம வித்யையை* அறிந்தவன் என்பது ப்ரமாண ஸித்தம் ; இவ்விஷயத்தில், *சிஷ்ய பாபம் குரோரபி* என்று சிஷ்ய குண புர்த்தி அற்றவனால் ஆசார்யனுக்கு ஞானக் குறைவு ஏற்படும் நிலையை,

*வருவதை விசாரியதே, இந்திரனுக்கு உபதேசித்து, தானும் ப்ருஹ்ம வித்யையை மறந்து, தன் சிஷ்யரான நாரத பகவானை இட்டு ஸர்வேஸ்வரன் உணர்த்துவிக்கும் படி இருந்த சதுர்முகன் பக்கலிலே கண்டு கொள்வது*

என்று ஸ்வாமி தேசிகன் ***குருபரம்பரா சாரத்தில்*** அருளினார்.

அதனால், ப்ருஹ்ம வித்யை அறிந்தவன் சதுர்முகன் என்பதாயிற்று.

3. சரணாகதனுக்கு, புருஷார்த்த காஷ்டை என்பது பாகவத கைங்கர்யம் என்பது ஸித்தம் :

# வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ ராமானுஜர்,

***பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி***

என்று 'சேஷ - சேஷி' விஷயத்தை விளக்கி அருளியுள்ளார்.

அதாவது,

***சேஷன்*** - தன் செயலினால் எப்போதும் சேஷிக்கு உகப்பை ஏற்படுத்துபவன்.

***சேஷி*** - சேஷனின் செயலினால் எப்போதும் உகப்பை அடைபவன்.

# ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-17) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***தேஷாம் க்ஞாநி நித்ய யுக்த ஏக பக்தி விஷிர்ஷ்யதே. ப்ரியோஹி க்ஞாநிநோர்த்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:***

அதாவது, அவர்களுக்குள் ஞானி என்பவன் எனக்கு பிரியமானவன். ஏனெனில் அவன் என்னுடனேயே இருக்க ப்ரிய படுபவன். மற்றவர்கள் பலன் கிடைத்ததும் விலகுவார்கள்.

# ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-18) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***உதாரா: ஸர்வ ஏவைதே ஞானித்வாத்மைவ மே மதம்.ஆஸ்தித: ஸஹி யுக்தாத்மா மாமேவாநுக்தமாம் கதிம்***

அதாவது, என்னை (கண்ணனை) பூஜிப்பவர்கள் நால்வரும் கொடையாளர்கள். அதில் ஞானி எனக்கு ஆத்மா. இது என் ஸித்தாந்தம். இதனால், பாகவதர்களிடம் உள்ள பகவத் ப்ரீதி தெளிவாகிறது.

அதனால், பாகவத சேஷத்வத்தை புருஷார்த்த காஷ்டை என சாஸ்த்திரங்கள் கூறுகிறது.

# பகவத் அடியார்களான பாகவத லக்ஷணத்தை, ஸ்வாமி தேசிகனின் ***ப்ரபாவ ரக்ஷ அதிகாரத்தில்*** உள்ள வரிகளைக் கொண்டு காண வேண்டும் :

***நம் தர்சனத்திலே நிலை உடையவராய், முமுக்ஷுக்களாய், கர்ம-ஞான-பக்தி-ப்ரபத்திகளில் ஏதேனும் ஒரு சாஸ்த்திர மர்யாதையாலே பகவத் ப்ரவணரானார்க்கு....***

இதை, இப்பரகரணத்தில், தெளிய வேண்டும்:

*நம் தர்சனத்திலே நிலை உடையவராய்* எனபதால் முக்கியமாக பெரிய பிராட்டியோடு சேர்ந்த நாராயணன் பரம் பொருள் என்றும், மற்ற தேவதாந்தரங்கள் ஆராத்யர்கள் அல்ல என்றும், சரணாகதி அனுஷ்டானமே மோக்ஷ உபாயம் என்கிற விஷயத்திலும் *கலக்கமற்ற மனோ-வாக்கு-செயல்களை உடையவர்களாக இருப்பவர்கள்* , என்பதாகிறது பாகவத லக்ஷணம்.

*முமுக்ஷுக்களாய்* - ப்ரயோஜநான்தர அபேக்ஷை அற்று மோக்ஷ ருசி மட்டுமே அள்ளவராய்

*கர்ம -ஞான-பக்தி-ப்ரபத்திகளில் ஏதேனும் ஒரு சாஸ்த்திர மர்யாதையாலே பகவத் ப்ரவணரானார்க்கு* என்பதினால் மோக்ஷ உபாயமான பக்தி யோகம் அல்லது சரணாகதி அனுஷ்டித்தனித்தில் அந்வயம் கொண்டவர்களே பாகவத லக்ஷணம் பொருந்தியவர் என்பதாகிறது.

# ஆக, சதுர்முக ப்ருஹ்மா உபாஸகனாக இருந்திருந்தால், பாகவத லக்ஷணம் உடையவராகக் கொள்ள நேரும் ; ஆனால், ஐந்தாவது வேதமாக போற்றப் படும் மஹாபாரதத்தில் வ்யாஸர் அருளியதாவது:

*ப்ருஹ்மாணம் சிதிகண்டம் ச யாஸ்ச அன்ய தேவதா ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்*

அதாவது,

சதுர்முகனையும் முக்கண்ணனையும் முமுக்ஷுக்கள் ஸேவிப்பதில்லை ஏனெனில் அவர்கள் தரும் பலன்கள் அற்பமானதே.

ஆக, சரணாகதனுக்கு, சதுர்முக தேவதாந்தர சம்பந்தம் நிஷித்தம் என்பதால், அனைத்து சதுர்முகனும் உபாஸகன் என்பது அனுபபன்னம்.

4. புராணங்களில் உள்ள வசனங்களை, மூல ப்ரமாணமான வேத வேதாந்தங்களோடு ஒப்பிட்டு அர்த்த நிர்ணயம் பண்ண வேண்டும்.

# மநு ஸ்ம்ருதியில் கூறப்படுவதாவது,

*ஆர்ஷம் தர்மோபதேசம் வேத சாஸ்த்ரா விரோதிநா  யஸ்தர்க்கேண அனுஸந்ததே ஸ தர்ம வேத நேத்ர:*

அதாவது,

வேத வேதாந்தங்களுக்கு விளக்க உரையாக உள்ள க்ரந்தங்களை, அதாவது ஸம்ருதி, புராணம், ப்ருஹ்ம ஸூத்ரம் போன்றவைகளை, விளக்கும் போது, வேத வேதாந்த வரிகளுக்கு, விரோதம் வராத வகையில் யார் அறிந்து கொள்கிறானோ அவனே தர்ம சாஸ்த்திரம் அறிந்தவன். இவ்விதம் உணராதவன்  தர்ம சாஸ்த்திரம் அறிந்தவனாக மாட்டான்.

# ஸ்ம்ருதியானது ஸ்ருதியை அபேக்ஷிக்கிறபடியால், பூர்வ மீமாம்ஸையில்,

*விரோதே து அநபேக்ஷ்யம் ஸ்யாத்*

என ஜைமிநி மஹரிஷி அருளியுள்ளார். அதாவது, ஸ்ருதியோடு முரண்படுகின்ற உப ப்ருஹ்மணங்கள் ஆதரிக்கத் தகுந்ததன்று, என்பது ஜைமினியின் அபிப்ராயம்.

ஆக, உப ப்ருஹ்மணங்கள் வேத வேதாந்த வரிகளோடு மாறுபடுமேயானால், மூல ப்ரமாணமான வேத வேதாந்த அர்த்தங்களே உபாதேயம் என்றபடி.

# மோக்ஷ பலன் பெற, ப்ருஹ்ம வித்யையைத் தவிர வேறு ஒரு வழி கிடையாது என்கிறது,

*நாந்யப்பந்தா அயனாய வித்யதே*

என்கிற தைத்ரீய உபநிஷத்.

# ஸாத்வத ஸம்ஹிதை வரிகளாவது :

*யஸ்ய அனுபவ பர்யந்தா புத்திஸ் தத்த்வே பிரதிஷ்டிதா. தத்த்ருஷ்டி கோசரா சர்வே முச்யந்தே ஸர்வகில்பிஷை*

அதாவது,

ஆசார அனுஷ்டான பூர்வகமான பகவத் அனுபவத்தை எல்லையாகக் கொண்ட தத்வ ஞானம் நிலை பெற்றவரான பரமேகாந்திகளின் கடாக்ஷத்திற்கு இலக்கான அனைவருக்கும் பாபங்கள் நீங்கப் பெறுகின்றன.

# ஆனால், சதுர்முகன் விஷயத்தில், சௌநக மஹரிஷி அருளியதாவது :

***ஆப்ருஹ்ம ஸ்தம்ப பர்யந்தா ஜகதந்தர வ்யவஸ்திதா: ப்ராணின: கர்ம ஜநித சம்சார வச வர்தின: யதஸததோ ந தே த்யானே ஞானினாம் உபகாரகா: அவித்ய அந்தர்கதா: ஸர்வே தே ஹி சம்சார கோசரா:***

அதாவது, சதுர்முகன் முதல் புழு பூச்சி வரை அனைவரும் கர்மத்துக்கு வசப் பட்டவர்கள். அவர்களை த்யானம் செய்வதில் சம்சார பந்தமே உண்டாகும்.

# ஶ்ரீமத் பாகவத வரிகளாவது :

***கர்மணாம் பரிபாகத்வாத் ஆவிர்ஞ்சாத் அமங்களம்***

அதாவது, கர்ம பலன்களை அனுபவிக்க சதுர்முகன் முதலானோர் அமங்களமானவர்கள், என்பதாகிறது.

# ஆக, அனைத்து சதுர்முகனும் மோக்ஷ உபாய உபாஸகன் என்பது அனுபபன்னம் ; ஶ்ரீ பாஷ்யம்–முதல் அத்யாயம்–மூன்றாம் பாதம் -ஆறாம் அதிகரணம்- ***தேவதாதிகரணம்*** -1-3-25, ப்ருஹ்ம ஸூத்ரத்தினால் விளக்கப் படுகிறது

***தத் உபரி அபி பாதராயண சம்பவாத்***

ப்ருஹ்ம உபாசனை மனிதர்களுக்கு மட்டும் அல்ல தேவர்களுக்கும் பொருந்தும் என்கிறார் பாதராயணர்.

ஆக, தேவர்கள் சக்தாதிகாரி ஆனபடியால், அவர்கள் மோக்ஷத்திற்காக, பக்தி யோகத்தை அனுஷ்டிக்க அர்ஹராகிறார்கள். அவ்வழியிலே, சதுர்முகனுக்கு ப்ருஹ்ம வித்யையில் அதிகாரம் உண்டு என்பது மட்டுமே.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

14.10.2022

வெள்ளிக் கிழமை

*பரி என்னும் உபஸர்க்கம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. உபஸர்க்கமாவது, ஒரு விஷய தன்மையை மேம்படுத்திக் காட்டுவது ; திருமழிசை ஆழ்வாரின் *நான்முகன் திருவந்தாதி* (4-1) பாசுரமானது :

*மேல் நான்முகன் அரனை இட்ட விடுசாபம் தான் நாரணன் ஒழித்தான் தாரகையுள் வானோர் பெருமானை  ஏத்தாத பேய்காள் பிறக்கும் கருமாயம் பேசில் கதை*

அதாவது,

முன்பு ஒரு காலத்தில், சதுர்முகன் ருத்ரனுக்கு கொடுத்த அனுபவிக்க வேண்டிய கொடிய சாபம், இந்த ப்ராக்ருத லோகத்தில் ஶ்ரீமந் நாராயணனே போக்கிருயளினன் ; அப்படிப்பட்ட நித்யர்களின் நாதனான ஶ்ரீமந்நாராயணனை வாயினால் போற்றாத துர்மதி உடையவர்களே ! நீங்கள் இனியும் பெற இருக்கும் துக்கமயமான கர்ப வாஸங்களை சொல்ல வேண்டுமானால், அது மஹாபாரதம் போல் பெரும் கதையாகும்.

இங்கு  *விடுசாபம்* என்பதில் *விடு* என்கிற உபஸர்க்கத்தினால் ‘கொடிய சாபம்’ சொல்லப் பட்டதாயிற்று. இங்கே ‘விடு’ என்கிற பதத்திற்கு தனிப்பட்ட அர்த்தம் கிடையாது.

2. அது போல *பரி* என்கிற உபஸர்க்கம் அதைத் தொடர்ந்து வரும் விஷய தன்மையின் அதிகப் படியைக் காட்டும் :

# *பரிக்ரஹங்கள்* - இந்த பத அர்த்தத்தை ஸ்வாமி தேசிகனின் வரிகளால் தெளிவாகலாம்.

ஸ்வாமி தேசிகனின் *அர்த்த பஞ்சக அதிகார* ப்ராப்தி விரோதி ப்ரகரண வரி :

*அபிஷேகத்துக்கு நாளிட்ட ராஜகுமாரனுக்கு சிறையிலே எடுத்து கை நீட்டின சேடிமார் பக்கலிலே கண்ணோட்டம் உண்டாம்போலே ப்ராரப்த கர்மபலமான தேஹேந்த்ரியங்களிலும் தத் அனுபந்திகளான பரிக்ரஹங்களிலும் தன்மூலபோகங்களிலும் கால்தாழப்பண்ணியாதல் அன்யபரராக்கியும் இப்படி பலமுகங்களாலே பகவத்ப்ராப்திக்கு விலக்காயிருக்கும்*

அதாவது :

*அபிஷேகத்துக்கு நாளிட்ட ராஜகுமாரனுக்கு* - மணிமகுடம் சூட்ட பெற உள்ள ஒரு அரச குமாரனுக்கு

*சிறையிலே எடுத்து கை நீட்டின சேடிமார் பக்கலிலே கண்ணோட்டம் உண்டாம்போலே* - தான் முன்பு ஒரு சிறிய தவறு காரணமாக சில காலம் சிறை வாசம் செய்த போது, அங்கிருந்த பணிப் பெண்ணிடம் இச்சைக் கொண்டாப் போலே

*ப்ராரப்த கர்மபலமான தேஹேந்த்ரியங்களிலும்* - முமுக்ஷுவிற்கு ப்ராரப்த பாப விசேஷத்தால் புலன்களால் அனுபவிக்கப்படுகிற உலக விஷயங்களிலும்

*தத் அனுபந்திகளான பரிக்ரஹங்களிலும்* - அத்தோடு சம்பந்தமுடைய மனைவி, வீடு, புத்ரன் முதலியவைகளிலும்

*தன்மூலபோகங்களிலும்* - அதன் வழி போகங்களிலும்

*கால்தாழப்பண்ணியாதல்* - துரிதமாக விலகாதபடி யத்நித்தும்

*அன்யபரராக்கியும்* - அதனால் பகவத் ஈடுபாட்டைக் குறைத்தும்

*இப்படி பலமுகங்களாலே பகவத்ப்ராப்திக்கு விலக்காயிருக்கும்* - ப்ராப்தி  விரோதிகள் செயல்படும்.

# *பரிகரங்கள்* - இந்த பத அர்த்தத்தை ஸ்வாமி தேசிகனின் வரிகளால் தெளிவாகலாம்.

ஸ்வாமி தேசிகனின் *பரிகர விபாக அதிகார* ப்ராப்தி விரோதி ப்ரகரண வரி :

***இவ்வித்யைக்கு பரிகரமாவது ஆனுகூல்ய ஸங்கல்பமும், ப்ராதிகூல்ய வர்ஜனமும், கார்பண்யமும், மஹாவாச்வாசமும், கோக்த்ருத்வவரணமும்***

அதாவது :

*இவ்வித்யைக்கு* - மோக்ஷ உபாயமான ப்ரபத்தி என்னும் அங்கிக்கு

*பரிகரமாவது* - அங்கி பலன் ஸித்திக்க, அதற்கு விதிக்கப் பட்ட அங்கங்கள் ஆவன

*ஆனுகூல்ய ஸங்கல்பவனமும்* - சாஸ்த்ரத்தில் விதித்த படி நடக்க உறுதி கொள்ளல்

*ப்ராதிகூல்ய வர்ஜனமும்* -  சாஸ்த்ரத்தில் தடுக்கப் பட்டவைகளை செய்யாதிருத்தல் என்ற உறுதி கொள்ளல்

*கார்ப்பண்யமும்* - தான் சாஸ்த்திர விதியான பக்தி யோகம் செய்ய தகுதி அற்றவன் என்று அனுஸந்தித்தல்

*மஹாவிச்வாசமும்* - ஸர்வேஸ்வரன் மோக்ஷம் அளிப்பான் என்ற நம்பிக்கை

*கோப்த்ருத்வ வரணமும்* - பக்தி யோக ஸ்தாநத்தில் ஸர்வேஸ்வரன் இருந்து பலன் கொடுக்கப் ப்ரார்த்தனை

3. ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், சரமஸ்லோகத்திற்கு *ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய* என்கிற பதங்களின் விளக்கம், சாஸ்த்திரம் விதித்த *பக்தி யோகம்* செய்யத் தகாதது என்கிற விதி என்று ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் அர்த்த்தம் கற்பிப்பர் ; அவர்களது முமுக்ஷுபடியில் உள்ள சரமஸ்லோக ப்ரகரணத்தில் கூறப் படுகிற விஷயமாவது :

எண். 201 : ***பரி என்கிற உபஸர்கத்தாலே, பாதகாதிகளை விடுமாப்போலே ருசி வாசனைகளோடும் லஜ்ஜையோடும் கூட மறுவலிடாதபடி விட வேணும் என்கிறது***

***அத: பாதக பீதஸ்தவம் - என்று தர்ம தேவதை பாதகமாக சொன்ன உபாயாந்தரங்களை விடுமளவில் புத்தி பூர்வகமாக அவற்றிலே ப்ரவர்த்திக்கைக்கு உருப்பான ருசியும் அபுத்தி பூர்வகமாக மூளுகைக்கு உருப்பான வாஸனையுமாகிற அவற்றோடு கூட ‘பகவதேக ஸாதனதைக வேஷமான ஸ்வ ஸ்வரூபத்துக்கு அத்யத்த விருத்தமானவற்றை நாம் செய்வதே’ என்கிற லஜ்ஜா ஸஹிதனாய்ப் கொண்டு மீளவும் அவற்றில் அன்வயம் வாராதபடி விட வேணுமென்று சொல்லுகிறது என்கை***

அதாவது, *ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய* என்னும் போது பக்தி யோகத்தை விடுகையாவது, ஞான சக்தி மாந்த்யத்தால் விடுகை என்று கூறலாகாது ; அந்த பக்தி யோகம் ஸ்வரூப விருத்தம் என்கிற காரணத்தால் விடும் போது, ஞான சக்தி உடையோருக்கும் அது அநுபாயம் என்பது ஸித்திப்பதற்காக *பரி* என்கிற உபஸர்க்கம் *ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய* என்பதில் உள்ளதாக பூர்வபக்ஷிகள் கூறுவர்.

4. ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் *ஸாத்யோபாய சோதனாதிகாரத்தில்*, இவ்விஷயத்தை, அருளிச் செய்கிறார்.

*அத: பாதக பீதஸ்த்வம் - என்று தர்ம தேவதை தன் புத்ரனுக்கு உபஸனாதிகளை ப்ராப்ய விரோதிகளென்று நினைத்து நிந்தித்தது என்னில் அதுவும் அத்யந்த அனுபபன்னம்*

என்று ஆரம்பித்து அதற்கு பிறகு மேலே

***அத: பாதக பீதஸ்த்வம் - என்கிற இடத்திலே பாதக சப்தத்தாலே உபாஸநாதிகளை நிந்திக்கிறது என்கைக்கும் ப்ரமாணமில்லை. ஆகையால், முமுக்ஷுவுக்கு விஹிதங்களாகையாலே பக்தி ப்ரபத்தி இரண்டும் யதாதிகாரம் பரிக்ராஹ்யங்கள்***

என்றும் அருளிச் செய்தார். இங்கு ***பரிக்ராஹ்யங்கள்*** என்பதால் முமுக்ஷுவிற்கு, யதா அதிகாரம், பக்தி யோகமும் ப்ரபத்தி அனுஷ்டானமும் உபாதேயம் என விளக்கியபடி.

இது உபாயாந்தரங்களை (பக்தி யோகத்தை) பாதகமாக சொல்லுகிறது என்றதற்கு கண்டனமாக அமைகிறது.

இனி ***அத: பாதக பீதஸ்த்வம்*** என்கிற ஸ்லோகத்திற்கு, சாஸ்த்ரீயமான அர்த்தமாவது : இந்த ஸ்லோகத்தில் பாதக சப்தத்தாலே பக்திக்கு ப்ரதிபந்தகங்களான பாதகங்களே சொல்லப் படுகிறது. அதற்கு ப்ராயசித்தமாக செய்ய வேண்டியது அஸஹ்யமென்று உபாய விரோதி பாபத்தினின்றும் பயந்தாயேயாகில் அந்தந்த ப்ராயசித்தங்களை விட்டு நாரயணபரனானால் உபாய விரோதி பாபங்கள் போகும். மோக்ஷ விரோதி பாபங்கள் போவதற்கு பக்தி யோகத்தை செய்ய முடியாதவன் பக்தி யோகத்தை விட்டு பகவானை தத் ஸ்தானத்தில் நிறுத்தி ப்ரபன்னனாக வேண்டும், என்பது ஸ்லோகார்த்தம். இப்படி ப்ரமாண அனுகுணமான ஸ்லோகார்த்தத்தை விட்டு தத் விருத்தமாக ***ராஜ வித்யா ராஜ குஹ்யம்*** என்று பகவானாலே பவித்ரமாக சொல்லப் பட்ட உபாஸந்த்தை தர்ம தேவதை பாதகமாக நிந்தித்து என்பது ப்ரமாண விருத்தமாகும்.

5. ஸ்வாமி தேசிகன் ***ஸாத்யோபாய சோதன அதிகாரத்தில்*** ,

***உபாஸநம் தானும் ஸாதநமன்று என்னில் 'ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய' என்றவிடத்தில், உபாஸநத்தையும் தர்ம சப்தார்த்மாக வ்யாக்யானம் பண்ணுகையாலே ஸ்வ வசன விரோதமுண்டாம்***

என அருளியுள்ளார். இதன் பொருளாவது:

# ***உபாஸநம்* -** பக்தி யோகம்

**# *தானும் ஸாதநமன்று* -** என்பது மோக்ஷ உபாயம் அன்று

**# *என்னில்* -** என்று கூறினால்

**# *ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய' என்றவிடத்தில்* -** கண்ணன் அருளிய சரமஸ்வோகத்தில் மோக்ஷ உபாயமான பக்தி யோகங்களை அங்கங்களோடு விடுத்து என்னும்போது

**# *உபாஸநத்தையும்* -** பக்தி யோகத்தையும்

**# *தர்ம சப்தார்த்மாக* -** மோக்ஷ உபாயம் என்று

**# *வ்யாக்யானம் பண்ணுகையாலே* -** விளக்கமளிப்பதால்

**# *ஸ்வ வசன விரோதமுண்டாம்* -** ஒரு விதத்தில், 'பக்தி யோகம் மோக்ஷ உபாயம் அன்று என்றும்' வேறொரு விதத்தில் 'பக்தி யோகமாகிய மோக்ஷ உபாயம் விட வேண்டியது என்றும்' விளக்கம் அளிக்கும் போது, இவ்வாறு உள்ள ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் விளக்கத்தில் முன்-பின் விளக்க விரோதம் உண்டாகிறது.

6. ***பரி*** என்கிற உபஸர்க்கம் பல ப்ரகாரமாக உபயோகிக்கப் படுகிறது ; அதாவது, ஒரு விஷய தன்மையை மேம்படுத்திக் காட்டுவது

# பகவத் கீதை - அத்யாயம் 1 - ஸ்லோகம் 30

***காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக் ச ஏவ பரிதஹ்யதே ந ச ஸக்நோம்யவஸ்தாதும் ப்ரமதீவ ச மே மந:***

அதாவது, காண்டீவம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் கடுமையான எரிச்சலுண்டாகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனம் சுழலுகிறது.

இதில் ***த்வக் ச ஏவ பரிதஹ்தே*** - உடலிலும் கடுமையான எரிச்சல் உண்டாகிறது

# பகவத் கீதை - அத்யாயம் 2 - ஸ்லோகம் 27

***ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச தஸ்மாத் அபரிகார்யே அர்தே ந த்வம் ஸோசிதுமர்ஹஸி***

அதாவது, பிறந்தவன் சாவது உறுதி எனில் செத்தவன் பிறப்பது உறுதி எனில் ஆகவே பரிகாரம் இல்லாத விஷயத்துக்காக நீ துயரப் படுவது தகாது.

இதில் ***தஸ்மாத் அபரிகார்யே அர்தே*** - ஆகவே பரிகாரம் இல்லாத விஷயத்துக்காக ; 'காரம்' என்பது செயலைக் குறிக்கும் ; இத்தோடு சேர்ந்த உபஸர்க்கமானது அந்த செயலின் தன்மையை மேம்படுத்திக் காட்டும் ; உதாரணமாக உபகாரம், அபகாரம், அஹங்காரம் போன்றவை.

# பகவத் கீதை - அத்யாயம் 4 - ஸ்லோகம் 8

***பரித்ராணாய ஸாதூநாம் விநாஸாய ச துஷ்க்ருதாம் தர்மஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகே யுகே***

அதாவது, தன் அடியார்களோடு கலந்து இருந்து காக்கவும் தீயன செய்வோரை அழிக்கவும் தர்மத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்

இதில் ***பரித்ராணாய ஸாதூநாம்*** - தன் அடியார்களோடு கலந்து இருந்து காக்கவும்

# பகவத் கீதை - அத்யாயம் 4 - ஸ்லோகம் 34

***தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஸ்நேந ஸேவயா உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானிநஸ்தத்த்வதர்ஸிந:***

அதாவது, ஆத்ம ஞானத்தை, வணக்கத்தாலும், கர்வமற்ற அறியாதவனின் கேள்வியாலும் தொண்டு புரிவதாலும் அறிந்துகொள். தத்வ விஷயத்தில் தெளிவு உடைய ஞானிகள் உனக்கு வேண்டிய ஞானத்தை உபதேசிப்பார்கள்.

இதில் ***பரிப்ரஸ்நேந ஸேவயா*** - கர்வமற்ற அறியாதவனின் கேள்வியாலும் தொண்டு புரிவதாலும்

# வேதவ்யாஸர் மஹாபாரதத்தில்,

***ப்ருஹ்மாணம் சிதி கண்டம் ச யாச்சன்யா தேவதா ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா: ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்***

என அருளியதாக காட்டப் பட்டிருக்கிறது ; அதாவது, ப்ராக்ருத லோகத்தில் இருக்கும் ப்ருஹ்மா, சிவன் போன்ற அவர தத்வமான தேவதைகளை, புத்தி உள்ளவர்கள் (மோக்ஷத்தில் ஆசை உள்ளவர்கள்), ஸேவிப்பதில்லை. அவர்கள் கொடுக்கும் பலன்கள் மிகுந்த மிதமானதாயும் அழிவடையும் தன்மையும் கொண்டுள்ளன என்கிற காரணத்தால் ; ஆக, ஸர்வ அந்தர்யாமியான கண்ணனே ஆராத்யன்.

இதில் *பரிமிதம் பலம்* - பலன்கள் மிகுந்த மிதமானதாயும் அழிவடையும் தன்மையும் கொண்டுள்ளன என்கிற காரணத்தால்

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****